# இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம்

# IDAIKKADU KALAIMAGAL COMMUNITY CENTE

Estd:- 20.01.1949

Regd No:- J.365

இடைக்காடு,
அச்சுவேலி.

IDAIKKADU,
ATCHUVELY.

idaikkadukalaimagal@gmail.com


திகதி 26/02/2015.

போசகர்

தலைவர்

கௌரவ செயலாளர்

கௌரவ பொருளாளர்

## இடைக்காடு சனசமூக நிலையம்
## முன்னேற்ற அறிக்கை - 2014.

2014ம் ஆண்டின் பொதுக்கூட்டம் 2014ம் ஆண்டு மாசி மாதம் 15ம் திகதி இரவு எட்டு மணியளவில் நிலைய மண்டபத்தில் திரு க. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் புதிய தலைவராக திரு க. தவரூபனும் செயலாளராக திரு ச. மெளனனும் பொருளாளராக திரு இ. சுதர்சனும் தெரிவு செய்யப்பட்டதுடன் உறுப்பினர்களை கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் நிலையத்தின் வளர்ச்சியும் பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளும் எதிர்காலத்தில் மேலும் சிறப்பானதாக அமைய வேண்டுமெனவும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மேலும் நிலையத்தின் பெயரில் நிலையத்தின் தலைவரும் பொருளாளரும் சேர்ந்து இயங்கத்தக்க வகையில் சேமிப்புக் கணக்கொன்றை கொமேர்சியல் வங்கியில் ஆரம்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கும் தீர்மானத்திற்கும் அமைவாக ஆட்சிக்குழுவால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1) பொது மக்களுக்கு வாடகைக்கு விடப்படும் கதிரைகளின் எண்ணிக்கை 140ல் இருந்து 200 ஆக அதிகரிக்கப்பட்டது.

2) நிலைய கட்டடத்தின் உள் பகுதிக்கு வர்ணம் பூசி மெருகேற்றப்பட்டுள்ளது.

# இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம்
# IDAIKKADU KALAIMAGAL COMMUNITY CENTE

Estd:- 20.01.1949 Regd No:- J.365

இடைக்காடு,
அச்சுவேலி.

IDAIKKADU,
ATCHUVELY.


திகதி 26/02/2015.

3) பொதுமக்களின் வாசிப்பிற்காக கொள்வனவு செய்யப்படும் நாட் பத்திரிகைகளின் எண்ணிக்கை ஒல் இருந்து 3 ஆக உயர்த்தப்பட்டது

4) நிலையத்திற்கென புதிதாக அலங்கார வளையம் ஒன்று செய்யப்பட்டு வாடகைக்கு விடப்படுகின்றது.

இவை தவிர நிலையத்திற்கு புதிய புத்தகங்களை கொள்வனவு செய்து நூல்நிலையத்தை இயங்க வைப்பதையும் நிலையத்திற்கென போட்டோ பிரதி இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதையும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற போதும் நிலையத்தில் போதிய நிதி வசதி இல்லாமையினால் இவற்றை நடைமுறைப்படுத்த முடியாதிருக்கின்றது. இந்நிலையில் இவ்விரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்றும் நோக்குடன் வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெற்று நிலையத்தின் தேவைகளை நிறைவேற்ற தீர்மானித்துள்ளோம். எனவே எமது இத் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வரும் நலன் விரும்பிகள் கொமேர்சியல் வங்கியின் அச்சுவேலிக் கிளையில் ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புக் கணக்கு இல 8156006781 ஊடாக தமது அன்பளிப்புகளை அனுப்பி வைக்கும்படி மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். பொருட்களாக அன்பளிப்பு செய்ய விரும்புபவர்கள் எமது இணையத்தளம் ஊடாக எம்முடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி,

போசகர்

தலைவர்

கௌரவ செயலாளர்

கௌரவ பொருளாளர்

கலைமகள் சனசமூக நிலையம்
ஸ்தாபிதம். 1949